MuKi Deutsch

# நான் டொச் படிக்கிறேன் - என் பிள்ளையும் படிக்கிறது



தமிழ்
tamilisch

## வேறு மொழி பேசும் தாய்மாருக்கும் அவர்களது பாடசாலை-க்குச் செல்ல வேண்டிய 3முதல் 5 வயதுள்ள பிள்ளைகளுக்கு-ம் டொச் மற்றும் இணைவாக்கல் கற்கைநெறி.

கொனிற்ஸ் மக்கள்சபைப் பகுதி பேர்ண் மாநிலத்தின் கல்வித் திணை-க்களத்தின் பண உதவியுடன் தாய்க்கும் பிள்ளைக்குமான முக்கி டொச் எனப்படும் டொச்மொழி மற்றும் இணைவாக்கல் கற்கை நெறியை வழங்குகிறது.

உங்கள் டொச் அறிவு, குறைவாக அல்லது இன்மையாக இருந்து உங்களுக்குப் பாலர்வகுப்பை ஆரம்பிக்கும் வயதில் பிள்ளையும் இருந்தால் இந்த டொச் கல்வி உங்களுக்கு மிகப் பொருத்தமானது.

### ஏன் டொச் படித்தல் வேண்டும்?

- நாளாந்த வாழ்க்கை விடயங்களை மற்றவருடன் கலந்துரையாடி விளங்கிக் கொள்ளலாம்
- சுவிசின் வாழ்க்கை முறைகள் தொடர்பாக பலவிடங்களை அறிந்து கொள்ளலாம்.
- ஏனைய தாய்மாருடன் கலந்துரையாடி பிள்ளைகளுக்கான விடயங்களை அறியலாம்.
- சுவிசின் பாடசாலைத்திட்டம் செயற்பாட்டை அறிந்து உங்கள் பிள்ளையின்ஆசிரியருடன் விடயங்களைக் கலந்துரையாடி விளக்கங்களைப் பெறலாம்.
- உங்கள் பிள்ளைக்குப் பாலர் வகுப்பிலும் பாடசாலையிலும் சிறப்பாக உதவி செய்யலாம்.
- டொச் படித்தல் சுவிசின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமென்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டுக் காட்டுதல்.

### வாசிக்க எழுதத் தெரியாமல் முக்கி டொச் கற்கைநெறியில் படிக்கல-ாமா?

இல்லை. உங்களுக்கு எழுத வாசிக்கத்தெரிந்திருத்தல் வேண்டும்.

### கொனிற்ஸ் மக்கள்சபைப்பகுதியில் வசிக்காவிட்டால் முக்கி டொச் கற்கைநெறியில் கலந்து படிக்கலாமா?

இக் கற்கைநெறி கொனிற்ஸ் கெமைண்டேபகுதியில் வாழும் பெண-களுக்குரியது. கற்கைநெறிக்குழுவில் இடம் இருந்தால் மட்டும் வழ-மைக்குமாறாக வேறு பகுதியில் வசிப்பவர் சேர்த்து கொள்ளப்படுவார்க-ள்.

### இந்த முக்கி டொச் கல்வி பிள்ளைகளுக்கு என்ன நன்மையளிக்கிறது?

- பிள்ளைகள் புதியபுதிய விடயங்களைப் படிக்கவும் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவும் பழகுவார்கள்.
- பிள்ளைகளுக்கு கதைகள் கேட்கவும் சிறிய பாட்டுக்கள் பாடவும் விருப்பமாதலால் இதை டொச்சில் பழகுவார்கள்.
- மிக முக்கியமாக டொச் படிப்பார்கள். டொச்சை விளங்கி பல சொற்களையும் படித்து விரைவாக டொச் படிப்பதில் முன்னேறிக் கொள்வது பாலர்வகுப்புப் படிப்பிற்கு இது உதவுகிறது.

### எவ்வாறு முக்கி டொச் கல்வி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது?

இலையுதிர்கால விடுமுறையின் பின்பாக ஆரம்பித்து ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு நடைபெறும். நீங்கள் வாராந்தம் இரு மணித்தியாலங்கள் படிப்பீர்கள். கற்பதற்கான விடயங்கள் தரப்படும். பிள்ளைகள் இதே நேரத்தில் வேறாக பிள்ளைகளுக்குரிய அவர்களின் விளையாட்டுக் குழுவில் தகுதி வாய்ந்த ஒருவரினால் இரு மணித்தியாலங்களுக்கு டொச்மொழி ஊக்குவிப்புக்களைப் பெறுவார்கள். முக்கிடொச் கொனிசின் மக்கள் சபைப்பகுதியின் Köniz Buchsee, Hessgut Liebefeld und Schliern Blindenmoos பகுதிகளில் நடைபெறுகிறது.

### எவ்வாறு எப்போது விண்ணப்பித்தல் வேண்டும்?

விண்ணப்பப்படிவத்தை நிரப்பி விண்ணப்பத்தின் பின் பக்கத்திலுள்ள விலாசத்திற்கு முடிவுத் திகதிக்கு முன்பாக அனுப்புங்கள்.

### முக்கிடொச் கல்விக்கான கட்டணம் எவ்வளவு?

ஒரு தாய்க்கும் ஒரு பிள்ளைக்கும் முழுக்கல்விக்கும் 245பிராங்குகள் கட்டணம் கல்விநெறி ஆரம்பத்தில் செலுத்துதல் வேண்டும்.

### கல்விநெறிக்காலத்தில் நீங்களோ உங்கள் பிள்ளையோ காப்புறுதிெ-சய்யப்படுவீர்களா?

இல்லை. நீங்கள் தனிப்பட்ட விபத்து மற்றும் பொருட்கள் பாதுகாப்புறு-தியைச் செய்திருத்தல் வேண்டும்.

### மேலதிக தகவல்களை எங்கே பெறலாம்?

இந்த முகவரியிலும் மின்அஞ்சல் ஊடாகவும் பெறலாம்.
Fachstelle Bildung der Gemeinde Köniz, Stapfenstrasse 13,
3098 Köniz, Tel. 031 970 92 93.
E-Mail: fachstelle.bildung@koeniz.ch.

இந்த துண்டுப்பிரதியை மேலதிக மொழிகளில் கீழுள்ள இணைய-த்தளத்தில் பெறலாம்:
http://www.koeniz.ch/erwachsenenbildung

---

Bitte frankieren -.85

MuKi Deutsch

MuKi Deutsch-Kurse
Gemeinde Köniz
Abteilung Bildung, Soziale Einrichtungen und Sport
Erwachsenenbildung
Stapfenstr. 13
3098 Köniz